# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி, MBA., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 04–ஆம் நாள், வியாழன்கிழமை

**I.A. No. 03 of 2024 in O.S. No. 09 of 2008**
**(CNR No. TNSA13-000124-2008)**

1. குமரவேல்
2. வடிவேல் .. மனுதாரர்கள் / வாதிகள்

எதிராக

1. ஆதிமூலம்
2. பன்னீர்செல்வம்
3. சங்கர் .. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 01.09.2025–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. சிவராஜன் அவர்களும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. V. குமரவேல் அவர்களும் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

*.. 2 ...*

**<u>உத்தரவுரை</u>**

மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிவேண்டி மனுதாரர்கள் / வாதிகள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

2. **<u>மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>** மனுதாரர்கள் / வாதிகள் அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் கடந்த 10.08.2017 அன்று வழக்கு வண்டிப்பாதையின் ஒரு பகுதியில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் சட்ட விரோதமாக செப்டிக் டேங்க் கட்டியதாகவும், மனுதாரர்கள் / வாதிகள் தற்காலிக தடையுத்தரவு கோரி இ.ம.வ.எண்.705/2018 என்ற மனுவை தாக்கல் செய்ததாகவும், மேற்படி மனு தவறுதலாக தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகவும், பின்னிட்டு ஆத்தூர் சார்பு நீதிமன்றத்தில் C.M.A.No.3/2020 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளதாகவும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளால் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட செப்டிக் டேங்கை அகற்ற வேண்டுமென்ற செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்தை வழக்குரையில் சேர்த்து வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என்றும் மனுதாரர்கள் / வாதிகள் மனுவில் கூறியுள்ளனர்.

3. **<u>1−ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>** மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மறுத்துள்ளனர். மேலும், மனுதாரர்கள் /

*.. 3 ...*

வாதிகள் கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கால வரையறையினால் தடைபட்டுள்ளது என்றும், ஆணையரின் சமீபத்திய அறிக்கையில், பாதையானது இந்த எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்றும், மேலும் பாதை சற்று அகலமானது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், எவ்வித அளவீடுகளும் இல்லாமல் கற்பனையாக வழக்குச்சொத்தில் செப்டிக் டேங்க் கட்டப்பட்டுள்ளதாக கூறி மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு தவறானது என்றும், வழக்கு ஏற்கனவே விசாரணைக்கு தயாராகிவிட்டதால் அதை இழுத்தடிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் மனுதாரர்கள் / வாதிகள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், எனவே, மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளனர்.

4. **தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

*மனுதாரர்கள் / வாதிகள் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா?*

5. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. <u>**தீர்வு :**</u>

1) மனுதாரர்கள் / வாதிகள் தங்களுடைய மனுவில், வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் கடந்த 10.08.2017 அன்று வழக்கு வண்டிப்பாதையின் ஒரு பகுதியில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் சட்ட விரோதமாக செப்டிக் டேங்க் கட்டியதாகவும், மனுதாரர்கள் / வாதிகள் தற்காலிக

.. 4 ...

தடையுத்தரவு கோரி இ.ம.வ.எண்.705/2018 என்ற மனுவை தாக்கல் செய்ததாகவும், மேற்படி மனு தவறுதலாக தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகவும், பின்னிட்டு ஆத்தூர் சார்பு நீதிமன்றத்தில் C.M.A.No.3/2020 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளதாகவும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளால் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட செப்டிக் டேங்கை அகற்ற வேண்டுமென்ற செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்தை வழக்குரையில் சேர்த்து வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என்றும் மனுதாரர்கள் / வாதிகள் கூறியுள்ளனர். மாறாக எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தங்களுடைய எதிருரையில், மனுதாரர்கள் / வாதிகள் கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கால வரையறையினால் தடைபட்டுள்ளது என்றும், ஆணையரின் சமீபத்திய அறிக்கையில், பாதையானது இந்த எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்றும், மேலும் பாதை சற்று அகலமானது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், எவ்வித அளவீடுகளும் இல்லாமல் கற்பனையாக வழக்குச்சொத்தில் செப்டிக் டேங்க் கட்டப்பட்டுள்ளதாக கூறி மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு தவறானது என்றும், வழக்கு ஏற்கனவே விசாரணைக்கு தயாராகிவிட்டதால் அதை இழுத்தடிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் மனுதாரர்கள் / வாதிகள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், எனவே, மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளனர்.

2) அசல் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்கையில், மனுதாரர்கள் / வாதிகள் அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளனர் என்பது தெரியவருகிறது. வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில்

.. 5 ...

கடந்த 10.08.2017 அன்று வழக்கு வண்டிப்பாதையின் ஒரு பகுதியில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் சட்ட விரோதமாக செப்டிக் டேங்க் கட்டியுள்ளனர் என்றும், மேற்படி சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட செப்டிக் டேங்கை அகற்ற வேண்டுமென்ற செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்தை வழக்குரையில் சேர்த்து வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என்றும் மனுதாரர்கள் / வாதிகள் மனுவில் கூறியுள்ளனர். இம்மனுவில் மனுதாரர்கள் / வாதிகள் கோரியுள்ள பரிகாரம் நீதியின் நலனுக்கு உகந்தது என்பதாலும், இம்மனுவை அனுமதிப்பதால் வழக்கின் தன்மை எவ்விதத்திலும் மாறாது என்பதாலும், மேலும் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்பதாலும் இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிடுகிறது.

7. இறுதியாக, மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிடுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 04–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.09.04 18:47:04 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

*.. 6 ...*

| | |
|---|---|
| மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சாட்சிகள் : | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் : | இல்லை |
| மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் : | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் : | இல்லை |
| நீதிமன்ற சாட்சிகள் : | இல்லை |
| நீதிமன்ற சான்றாவணங்கள் : | இல்லை |

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.09.04 18:47:20 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

**மு.மா.உ.நீ., (மு.கூ.பொ) ஆத்தூர்.**

**இ.ம.வ. எண்.03/2024**

**---------------**

**அ.வ. எண்.09/2008**

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 04.09.2025